CC 32/2024

03.02.2026

பு.சா.1,

பெயர்: கார்த்திகேயன், த/பெ. தங்கவேல்

பு.சா.1 சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused Present. Accused counsel present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இருசக்கர வாகனம் வாங்கி விற்கும் வேலை செய்து வருகிறேன். அலுவலகம் எதுவும் வைத்து நடத்தவில்லை. என்னிடம் நான் செய்யும் தொழிலுக்கு அனுமதி ஏதும் இல்லையென்றால் சரிதான். நான் 12 ம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் வருமான வரி தாக்கல் செய்வதில்லை.

எதிரியை எனக்கு எப்படி தெரியுமென்றால் என்னிடம் பணம் வாங்க வரும்போது, பழக்கம். அதற்கு முன்னர் எதிரியை எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, அலைபேசி மூலம் பேசியுள்ளோம். எதிரி எதற்காக பணம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. எதிரியின் குடும்ப நிலை மற்றும் அவரது பின்புலம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான், குடும்ப செலவிற்காக கொடுக்கப்பட்டது.

எனக்கு வேறு நீதிமன்றங்களில் காசோலை வழக்கு உள்ளதா என்றால் 2 முதல் 3 வழக்குகள் உள்ளது. CC 848/2022, CC 850/2022, CC 797/2022, STC 2051/2024, STC 2052/2024 (JM1 Court, Pollachi.) CC 676/2023, CC 520/2024, CC 518/2024, (JM2 Court, Pollachi) ஆகிய வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

மேற்கண்ட வழக்குகளின் மொத்த தொகை சுமார் 8 லட்சம் வரும். பணம் கொடுத்து வாங்குவது குறித்தும் வழகக்கு தாக்கல் செய்வதும் குறித்தும் எனக்கு தெரியுமென்றால் சரியல்ல, வழக்கறிஞரின் உதவியுடன்தான் வழக்கு தாக்கல் செய்வேன். ரூ.1000/-க்கு மேலான பரிவர்த்தனைகளை வங்கி கணக்கு மூலம்தான் செய்ய வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமென்றால் சரிதான். நான் எதிரிக்கு 1 இலட்சம் ரூபாயை பணமாகத்தான் கொடுத்துள்ளேன். **(எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கு இணங்க சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**
Judicial Magistrate No. II,
Pollachi.